30.01.2026

அ.வ.எண். 110/2022

பி.சா.1 – திருமதி.கௌரி, க/பெ.முருகேசன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 30.01.2026 is accordance with the provision of Act X of 3331

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான், 142, மாணிக்கம்பாளையம், ஈரோட்டில் வசித்து வருகிறேன். நான் மாணிக்கம்பாளையம், நாராயணவலசுவில் குடியிருக்கிறேன். நாராயணவலசுவில் எந்த வீதியில் இருக்கிறேன் என்றால் நாராயணவலசு என்று தான் சொல்வார்கள். EW / AW என எண் தான் கொடுப்பார்கள். நாராயணவலசு, ஈரோட்டில், சித்தோடு ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். நாராயணவலசுவில், நாச்சாயி என்ற டீக்கடை உள்ளது என்றால் சரிதான். அங்கு தண்ணீர் தொட்டி உள்ளது என்றால் சரிதான். நான் நாராயணவலசுவில் அரசுப் பள்ளிக்கு அருகிலும் தண்ணீர் தொட்டிக்கு அருகிலும் வசித்து வருகிறேன்.

2. நாராயணவலசு என்பதும், மாணிக்கம்பாளையம் என்பதும் வெவ்வேறு கிராமங்கள் என்றால் சரிதான், மாணிக்கம்பாளையம் என சொல்வார்கள். நான் எந்த முகவரியில் குடியிருக்கிறேன் என்பதற்கு ஆதார் அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் என்றால் சரிதான். **கௌரியின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆதார் அடையாள அட்டையின் படி, 51, பெரியவலசு, வீரப்பன் சத்திரம், ஈரோட்டில் குடியிருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். திருமணம் ஆன பெண்களுக்கு ஆதார் கார்டில் கணவர் பெயர் தான் வரும் என்றால் சரியல்ல.

3. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்னுடைய குடும்ப அட்டை நகல் என்றால் சரிதான். அதில், 51/62, பெரியவலசுவில் குடியிருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். **1ம் பிரதிவாதியின் குடும்ப அட்டை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.27**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் சண்முகம் என்பது மாமனார், முருகேஷ் என்பது எனது கணவர். என் அம்மா பெயர் சரஸ்வதி. என் தாயார் சரஸ்வதிக்கு எப்போது, எங்கு திருமணம் நடைபெற்றது என்று தெரியாது. நான் என்ன தேதியில், எங்கு பிறந்தேன் என்றால் தெரியாது. நான் 2 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் புலியகுளத்தில் உள்ள பள்ளியில் படித்தேன். பி.சா.ஆ.4 பள்ளி சான்றிதழில், எனது முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அம்மன்குளம் வடக்கு என உள்ளது. கதவு எண் மற்றும் வீதி பெயர் இல்லை. பி.சா.ஆ.4 பள்ளி சான்றிதழை 07.01.2022 ல் பெற்றேன் என்றால் சரிதான். நான், விண்ணப்பம் கொடுக்கும்போது என்ன முகவரி இட்டு விண்ணப்பம் கொடுத்தேன் என்றால் பெரியவலசு முகவரியை குறிப்பிட்டுள்ளேன்.

4. பி.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள தகப்பனார் பெயர் தவறானது என்றால் சரியல்ல. என் அம்மா சரஸ்வதியின் கணவர் பெயர் வேலாயுதம் என்றால் சரியல்ல, பரமசிவம் ஆகும். வாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி பொய் ஆவணம் தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் 1987/ 1988 ஆண்டு வாக்கில் ஏற்பட்டது. தேதி சரியாக நினைவில்லை. எனக்கு திருமணம் ஆகும் வரை, கோயம்புத்தூரில் வசித்து வந்தேனா என்றால் இல்லை, ஈரோட்டில் வசித்து வந்தேன். ஈரோட்டிற்கு எனது தாயார் எனக்கு 10 வயது இருக்கும்போது அழைத்து சென்றார்.

5. பின்னிட்டு நான் கோயம்புத்தூரில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். அப்பா மட்டும் இருந்தார். என் அப்பா, கோயம்புத்தூர் ரயில்வே நிலையத்தில் கூலி வேலை செய்து வந்தார். என் அப்பா, ரயில்வே நிலையத்தில் பிளாட்பாரத்தில் கூலி வேலை செய்தார், நான் சென்று பார்த்தேன். எனக்கு 10 வயது இருக்கும்போதும், தற்போதும் என் அம்மா சரஸ்வதியம்மாளுக்கு எங்கு, எப்போது திருமணம் நடைபெற்றது என கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.சரஸ்வதியம்மாளுக்கும், பரமசிவத்திற்கும் ஒருபோதும் திருமணம் நடைபெறவில்லை என்றும், அதனால் தான் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. பள்ளபாளையத்தில் அனைவருக்கும் தெரியும், என்னுடைய மூன்று

அத்தைகளுக்கும் தெரியும்.

6. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில், பக்கம் 2 ல், பத்தி 4 ல், என் தாயாருக்கும், என் தகப்பனாருக்கும், ஏற்பட்ட இருந்த பிரச்சனை காரணமாக என் தாயார் என்னை எடுத்துகொண்டு ஈரோட்டிற்கு சென்று விட்டார். என்னுடைய எதிர் வழக்குரையில், பக்கம் 4, பத்தி 9 ல், "எனக்கு 1987 ல் திருமணம் ஆகி ஈரோட்டிற்கு சென்றதாகவும், 1988 ல் முதல் மகள் பிறந்ததாகவும், பின்னிட்டு ஒரு மகன், ஒரு மகள் பிறந்தனர் என்பதும், அவர்களை பார்த்துகொள்வதற்காக எனது தாயார் ஈரோட்டிற்க வந்ததாகவும், 1992 ம் வருடம் உடல்நலக்குறைவு காரணமாக இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன்" என்றால் சரிதான். 1992 ல் என்ன தேதியில் என் அம்மா இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் அம்மாவிற்கு இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.14 கோவை மாநகராட்சி பிறப்பு மற்றும் இறப்பு நகராட்சி பதிவேட்டில், வரிசை எண்.1780 ல்,வேலாயுதம் மற்றும் சரஸ்வதிக்கு பெண் குழந்தை பிறந்ததாக பதிவு உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை, (வா.சா.ஆ.14 ஆவணத்தை பார்க்கும்போது மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது).

7. பரமசிவத்துடன் உடன்பிறந்தவர்கள் மொத்தம் 5 நபர்கள், (3 பெண்கள், 2 ஆண்கள்) ஆவார்கள். முதலாவதாக பழனியப்ப தேவர் பிறந்தார். கடைசியாக என் அப்பா பிறந்தார். இடையில் பிறந்த நபர்களின் வரிசை பற்றி தெரியாது. பரமசிவத்தின் சகோதரர், பழனியப்பன் எங்கு இறந்தார் என்றும், அவருக்கு எங்கு காரியம் நடைபெற்றது என்று தெரியாது. என் அப்பாவுடன் உடன் பிறந்த சகோதரிகள் கருப்பாத்தாள், அங்காத்தாள், சுந்தாராம்பாள் ஆவார்கள். மேற்படி 3 அத்தைகள் எங்கு எப்போது இறந்தார்கள் என்று தெரியுமா என்றால் சுந்தாராம்பாள் இறந்தது பற்றி தெரியும், மற்ற அத்தைகள் இறப்பு விவரம் மற்றும் காரியம் எங்கு நடைபெற்றது பற்றி தெரியாது.

8. பழனியப்பனின் மனைவி பெயர் தெரியுமா என்றால் மொழுகா என்று அழைப்பார்கள். அவர்களுக்கு 3 மகன்கள், 2 மகள்கள் ஆவார்கள். அவர்கள் எங்கு என்ன படித்தார்கள், என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சுந்தாராம்பாளின் பிள்ளைகள் பற்றி தெரியுமா என்றால் 1. செல்வராஜ், 2. தங்கவேல்,

3.பானு, 4. புஷ்பா, 5.ஆனந்தி ஆகியோர் ஆவார்கள். அவர்கள் எங்கு, என்ன படித்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அங்காத்தாளின் குழந்தைகள் பெயர், விவரம் தெரியாது. கருப்பாத்தாளின் கணவர் மற்றும் குழந்தைகள் பற்றி தெரியுமா என்றால் கணவர் பெயர் தெரியாது, 4 மகன்கள், 1 மகள் உள்ளனர். அவர்களின் பெயர் தெரியுமா என்றால் 1. பானு, 2. முருகன், 3. செந்தில், 4. செல்வராஜ், மற்றொரு பெயர் தெரியவில்லை.

9. நான், பரமசிவத்தின் மகள் அல்ல என்றும், பரமசிவம் திருமணம் ஆகாமல் குழந்தைகள் இல்லாமல் இறந்துவிட்டார் என்றும், நான், பரமசிவத்தின் மகள் அல்ல என்றும், அதனால் தான் மேற்படி விவரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. அங்கு போக்குவரத்தே இல்லை. பி.சா.ஆ.1 பரமசிவம் வாரிசு சான்றிதழில் என் தாயார் இறந்துவிட்டார் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1992 ம் ஆண்டு என் தாயார் சரஸ்வதியின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்திருந்தால் தான் அதனை நீக்கி வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் வழங்க முடியும் என்றால் சரியல்ல. என் தாயாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யாமல் பி.சா.ஆ.1 வாரிசு சான்றிதழ் சட்டவிரோதமாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. 2022 ல் மனு கொடுத்து வாரிசு சான்றிதழ் பெற்றேன். நான் 2022 ல் வாரிசு சான்றிதழ் பெறும்போது நீதிமன்றத்தை அணுகி மனு தாக்கல் செய்தேனா அல்லது தாசில்தாரிடம் மனு கொடுத்தேனா என்றால் தாசில்தாரிடம் மனு கொடுத்தேன். 1995 ல் பரமசிவம் இறந்துள்ளதால் நீதிமன்றம் மூலம் தான் வாரிசு சான்றிதழ் பெற முடியும், 2022 ல் நேரடியாக தாசில்தாரிடம் வாரிசு சான்றிதழ் பெற முடியாது என்றால் சரியல்ல. என் அப்பாவின் இறப்பு சான்றிதழை கொடுத்து தான் சான்றிதழ் வாங்கினேன். பி.சா.ஆ.1 வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி பொய் ஆவணம் கொடுத்து நீதிமன்றத்தை அணுகாமல் சட்டவிரோதமாக வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

11. பரமசிவம் 1995 இறந்த நிலையில், உடனடியாக வாரிசு சான்றிதழ் வாங்காததற்கு என்ன காரணம் என்றால் அப்போது வாங்கவில்லை, பின்னிட்டு தான்

வாங்க வேண்டும் என்று தோன்றியது. பி.சா.ஆ.2 கூட்டு பட்டாவில், 30.09.2022 ல் எனது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூட்டு பட்டாவில், எங்கள் பெயரை சேர்க்க வேண்டி மோசடியாக வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பரமசிவம் உயிருடன் இருந்தபோது எனது பெயரிலோ, என் தாயார் பெயரிலோ எவ்வித ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். பரமசிவம் அவர்கள் நோய் வாய்ப்பட்டு என் பெரியப்பா மகள் பார்த்து வந்தார். என் தகப்பனாருக்கு கேன்சர் நோய் தாக்கப்பட்டிருந்தது. எவ்வளவு நாட்களாக என் தகப்பனார் கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டு சென்னையில் இருந்தார் என்றால் தெரியாது. என் தகப்பனார் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்.

12. என் தகப்பனார் கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டு சென்னையில் இருந்தபோது நான் சென்று பார்த்தேனா என்றால் என் அப்பா அங்கு இருந்த விவரம் எனக்கு தெரியாது. என் அம்மா 1992 ம் ஆண்டிற்கு முன்பாக என் தகப்பனாரை சென்னை சென்று கவனித்து வந்தாரா என்றால் என் அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். என் பெரியப்பா மகள் பெயர் பேச்சியம்மாள், அவர் தான் என் தகப்பனாரை கவனித்து வந்தார். பேச்சியம்மாள் என்பவர் பழனியப்ப தேவரின் மகள் ஆவார். பழனியப்ப தேவரின் வாரிசுகள் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான்.

13. என்னுடைய எதிர் வழக்குரை பக்கம் 2 ல், பத்தி 5 ல், " பரமசிவம் கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டார் என்பதையும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை எடுத்துகொண்டு இருந்தார் என்பதை நான் மறுத்துள்ளேன்" என்றால் சரியல்ல, அதுதான் உண்மை. பரமசிவத்திற்கும், சரஸ்வதிக்கும் எந்த காலத்திலும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் பரமசிவத்திற்கும், சரஸ்வதிக்கும் பிறந்தவர் அல்ல என்றால் சரியல்ல. நான் வேலாயுதத்திற்கும், சரஸ்வதிக்கும் பிறந்தவர் என்றால் இல்லை. பரமசிவம் கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்த நிலையில் என் அம்மா சரஸ்வதி மனைவி இல்லை என்பதாலும், நான் பரமசிவத்தின் மகள் அல்ல என்பதாலும் அவரை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல.

14. பழனியப்ப தேவரின் சொத்துக்களை அபகரிக்க வேண்டி பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் பரமசிவத்தின் சொத்துக்களை நான் விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாரிசு என்ற நிலையில் விற்றுள்ளேன், நான் பரமசிவத்தின் வாரிசு அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur